1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அவருக்கு அனுமதி கொடுத்தேன்.

திரு. க சுப்பு: என்ன உரிமைப் பிரச்சினை? யார் மேல் என்று சொல்ல வேண்டாமா: என்ன பயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லக்கூடாது. நான் அனுமதித்தாலொழிய சொல்லக்கூடாது.

திரு. க. சுப்பு: நான் சொல்லாமல் விட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த விதியின்கீழ் அவர் சொல்ல முடியும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். உங்களுடைய அனுமதியின் பேரில்தான் அது இந்த அவைக்கு வரமுடியும். நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். ஏன் உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளவில்லை என்று வற்புறுத்த யாருக்கும் உரிமை கிடையாது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: ஆயிரம் பேர் என்ன சொன்னாலும் உரிமைப் பிரச்சினை என்ன என்று நான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதித்தாலொழிய நீங்கள் சொல்ல முடியாது. இந்த நிலை பற்றி எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும்.

திரு. க. சுப்பு: சபாநாயகர் சபாநாயகராக இல்லை. நான் உரிமைப் பிரச்சினை என்ன என்று சொல்லாமல் விடமாட்டேன். எங்கள் மேல் உரிமைப் பிரச்சினை கொடுத்தால் உடனே எடுத்துக் கொள்வது, அடுத்தவர்கள் மீது கொடுத்தால் எடுத்துக் கொள்வதில்லை.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) சிதம்பரத்தில் திரு. லத்தீப் அவர்களை சிலர் தாக்க முயன்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் 10—3—79 அன்று இரவு 7-20 மணிக்குச் சிதம்பரம் நகரைக் கடந்து கொண்டிருந்தபோது சில காலிகளும், போலீசாரும் தடுத்து நிறுத்தித் தாக்க முயன்றதன்

விளைவால் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலையைப் பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் மு. அம்பிகாபதி, கே. கந்தசாமி, துரை முத்துசாமி, ஜே. ஜேம்ஸ், எஸ். சிவசாமி, துரை கலியமூர்த்தி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : (மேஜை மேல் உள்ள வெயிட்டை எடுத்துக் காட்டி) இந்தத் துணி உறைக்குள் முன்பு மணல் இருந்தது, தற்போது பஞ்சை அடைத்து வைத்திருக்கிறார்கள். மீண்டும் மணலை அடைத்து வைப்பார்களா அல்லது வெயிட்டுக்கு கல்லை வைப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த வாரம் நடந்த நிகழ்ச்சியின் காரணமாக மாற்றியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது நாங்கள் மாற்றினோம்.

திரு. மு. கருணாநிதி : திரு. சுப்பு அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை நேற்றே உங்களிடம் தரப்பட்டது. அதை ஏன் எடுத்துக்கொள்ள மறுக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று என்னிடம் கொடுத்தபோது ஒரே ஒரு பத்திரிகை காட்டப்பட்டது. இன்னும் இரண்டு மூன்று பத்திரிகைகள் தாருங்கள் என்று கேட்டேன். இரண்டு மூன்று பத்திரிகைகளைப் பார்க்க வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : என்ன உரிமைப் பிரச்சினை என்று படித்தால் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஆய்வில் இருக்கிறது. நான் அனுமதி தரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் தான் வழி காட்ட வேண்டும். வேறு இரண்டு மூன்று பத்திரிகைகளைக் காட்டச் சொன்னால் தேவையில்லை என்று சொல்லுகிறார்.

திரு. சி. ஆறுமுகம் : பத்திரிகைகள் இங்கேயே இருக்கின்றன. ஒரு நாள் போதாதா அவற்றைப் பார்ப்பதற்கு? நீங்கள் வரவழைத்துப் பார்க்க முடியாதா? உங்களுடைய அறைக்குப் பக்கத்திலேயே எல்லாப் பத்திரிகைகளும் இருக்கின்றன. அதை ஏன் பார்க்கக்கூடாது?

திரு. மு. கருணாநிதி : யார் மீது உரிமைப் பிரச்சினை என்பதையாவது சொல்ல அனுமதிக்கலாம் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளின்படி அனுமதி இல்லை. நான் அனுமதிக்காமல் பிரச்சினையைச் சொல்ல முடியாது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர் லத்தீப் அவர்கள் கடந்த 10.3.79 அன்று சிதம்பரம் வழியாகச் செல்லுகிறபோது அங்கே காவல் துறையினர் அவரைத் தடுத்து நிறுத்திபோது நான் பொதுக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டும் நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர்' என்று கூறியும் அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர் அங்கே நின்று கொண்டிருந்தவர் 'யாரடா சட்ட மன்ற உறுப்பினர்' என்று கேட்டிருக்கிறார். அவமரியாதை யாகப் பேசி, ஒரு சட்டமன்ற உறுப்பினரையே கேவலப்படுத்தி இருப்பதோடு மட்டுமல்லாமல் சில காலிகளும் அங்கே முறைகேடாக அவரிடம் நடந்து இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நடத்தப்படவேண்டு மென்று நடத்தப்படாமல் மிகவும் மோசமாக, கேவலமாக காவல் துறையைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டிருப்பது, சட்ட மன்ற உறுப்பினர்களையெல்லாம் அவமானப்படுத்துகிற நிகழ்ச்சியாகும். ஒரு சட்டமன்ற உறுப்பினா என்கிறபோது கான்ஸ்டபிளோ, ஹெட் கான்ஸ்டபிளோ, சப்-இன்ஸ்பெக்டரோ எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற முறையில் கூட இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறார்கள், இதே மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் நாளைக்கே கூட அமைச்சராகலாம். இன்றைக்கு அமைச்சராக இருக்கிறவர்கள் சட்டமன்ற உறுப்பினராகலாம். எனவே சட்டமன்ற உறுப்பினரா, அமைச்சரா என்று இல்லாமல்-சட்டமன்ற உறுப்பினரே கூட இல்லாமல் போகலாம், மக்கள் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம்-மரியாதையாக நடத்தப்படவேண்டும். அதைப்பற்றி விரிவாக இந்தச் சபையிலே விவாதிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினருக்கு டாக்ஸி கூட வரமாட்டேன் என் கிறார்கள், ஆட்டோ கூட வரமாட்டேன் என்கிறார்கள். பணம் கூடுதலாகக் கொடுத்தால் வருவதில் சிக்கல் இருக்கிறது. இங்கே சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே டெலிபோன்கூட சரியாக வேலை செய்யவில்லை, டெலிபோன் கூட எங்களுக்கு சரியாக மதிப்புக் கொடுக்கவில்லை. அதன் பேரிலே விவாதம் நடைபெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் 10.3.79 அன்று இரவு சிதம்பரத்திலே காவல்துறையின ரால் இழிவாகப் பேசப்பட்டது சம்பந்தமாக விவாதிப்பதற்காக அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டு மென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கண்ணியமிக்க திரு. லத்தீப் அவர்கள் சட்டப்பேரவை நடந்துகொண்டிருக்கிற நேரத்திலே சிதம்பரம்

வழியாகக் குறிப்பிட்ட தெருவின் வழியாக, அடுத்த ஊருக்குப் பொதுக் கூட்டத்திலே கலந்து கொள்வதற்காக ஒரு கொடியைக் கட்டிய காரிலே அந்தத் தெருவிலே நுழைந்து செல்கிற போது, சில பேர்கள் கல்லெறிந்ததாகவும், போலீஸ் அதிகாரிகள் வந்து கேட்டபோது, திரு. லத்தீப் அவர்கள் நான் சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னதற்குப் பிறகும், உன்னை யாரடா சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்வான், என்ற முறையிலே சொல்கிற அளவிற்கு மனம் புண்படும்படியாகப் பேசியதோடு மட்டுமல்லாமல் பொதுமக்களும் அங்கே ஆவேசமாக வந்து, அவருடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய சூழ்நிலையெல்லாம் இருந்தது என்று மாண்புமிகு உறுப்பினரே என்னிடத்திலே நேரிலே சொன்னார்கள். இங்கே அவர்கள் இருக்க வேண்டுமென்ற நிலமை இருப்பினும், அவருடைய துணைவியார் உடல்நிலை குறித்து அவருக்கு தந்தி வந்த காரணத்தால் அவர் கிராமத்திற்குப் போயிருக்கிறார், அதனாலே அவர் நேரிலே இங்கே விளக்கம் சொல்ல வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மாண்புமிகு உறுப்பினர் லத்தீப்புக்கு தனிப்பட்ட முறையிலே ஏற்பட்ட நிகழ்ச்சியாகக் கருதாமல் நம் அத்தனை பேர்களுக்கும் நடந்துவிட்ட நிகழ்ச்சியாக கருதி, இது தொடர்ந்து நடைபெறாத முறையிலே மரியாதை அளிக்கிற அளவிற்கு, காவல் துறையினர் தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டும் ஏதேதோ கடமைகளைச் செய்யவேண்டுமென்றெல்லாம் எழுதி வைத்து இருக்கிறார்கள், எந்தப் பிரஜையாக இருந்தாலும் மரியாதையாக நடத்துவதற்கு அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். முறையோடு சொல்லி நிறுத்தியிருக்கலாம், ஆனால் கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, அல்லது எதுவாக இருந்தாலும்கூட, முறை தவறி நடந்தது ஒரு பதட்டமான நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது. இதைப் பற்றி விவாதித்து முடிவுசெய்வதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற முறையிலே இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன். வணக்கம்.

[முற்பகல் 10.20]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சிதம்பரம் வழியாகச் சென்றபொழுது நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி எனக்கு முன்னால் எடுத்துக்கூறிய நண்பர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எந்த மரி

1979 மார்ச் 14] [திரு. ஜே. ஜேம்ஸ்]

யாதையும், எந்தப் பாதுகாப்பும் இந்த நாட்டில் இருக்கிறதோ அந்த அளவிற்கு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் கொடுக்க வேண்டிய கடமை இந்த அரசாங்கத்தையே சார்ந் திருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன். அதற்குப் பதிலாக இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பல்வேறு நிகழ்ச்சி களைப் பார்க்கும்பொழுது ஆளுகின்ற ஆளுங்கட்சியைச் சேர்ந்த வர்களுக்கு ஒரு நியதியும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு இன் னொரு நியதியும் என்ற முறையிலே அரசாங்கத் தரப்பிலே மட்டு மல்ல, பல்வேறு இலாக்காக்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது குறுப்பாக, போலீஸ் இலாக்காவில் திட்டமிட்ட செய லாகவே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் லத்தீப் அவர்களை நடத்தியமுறை, அவர்களிடம் எந்த முறையில தகாத வார்த்தைகளை உபயோகித்தார்கள் என்பதைப்பற்றி இங்கே இந்த மாமன்றத்திலே எடுத்துக்கூறக்கூடிய வார்த்தைகள் அல்ல என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த அரசாங்கம் நிச்சயமாக போலீஸ் இலாக்கா விற்கு ஒரு டைரக்ஷன் கொடுத்தாக வேண்டும். எதிர்க் கட்சியினரோடு முறைகேடாக நடக்கக்கூடாது, அப்படி நடந்தால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தர வாதம் கொடுத்தால்தான் போலீஸ் இலாக்காவிலுள்ள அதிகாரிகள் ஒழுங்காக செயல்படுவார்கள் என்ற அளவிற்கு வந்துவிட்டது. இப்பொழுது இருக்கும் முறை என்னவென்றால் எதிர்க்கட்சி அங்கத்தினர்களை, அல்லது சட்டமன்ற உறுப்பினர்களைத் தாக்கியவர்களுக்குத்தான் பரிசு என்ற முறையில் அரசு இருக்கும் நிலையில், அதன் அதிகாரிகள் செயல்படுகிறார்கள். ஆகவே, இந்த நிலை நிச்சயமாக மாறவேண்டும். ஆகவேதான் சிதம்பரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி இன்று நாம் விரிவாக விவாதிக்க இந்தச் சட்டமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் நமது மதிப்பிற்குரிய முஸ்லீம் லீக் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு லத்தீப் அவர்கள் சென்னையிலிருந்து சிதம்பரம் வழியாகத் தேரழுந்தூருக்குச் சென்றிருக்கிறார்கள். 10-3-79 ஆம் தேதி யன்று சுமார் ஏழேகால், ஏழரை மணியளவில் சிதம்பரம் வடக்கு வீதியும், கீழ வீதியும் சந்திக்கும் இடத்தில் ஆளுங் கட்சியினரால் தடுத்து நிறுத்தப்பட்டு அங்கே அவரைத் தரக் குறைவாகப் பேசியிருக்கிறார்கள். அவர் முஸ்லீம் லீக் சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னபொழுது, இவர்தான் ஆளுங் கட்சியை மிகத் தீவிரமாக எதிர்த்துப் பேசுகிற சாயபு என்று தரக்குறைவாகப் பேசியிருக்கிறார்கள், சொல்லக்கூடாத வார்த்தைகளைப் பேசியிருக்கிறார்கள். அங்கே போலீஸ்காரர்கள் இருந்திருக்கிறார்கள். அருகிலேதான் டி.எஸ்.பி.யின் விடுதி

இருக்கிறது. அதற்கு அருகில்தான் இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. அங்கே ஆளுங்கட்சியினரின் கூட்டம் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நான் சென்னையிலிருந்து 6—40, 6—45 மணி அளவிலே அங்கே செல்கிறபொழுது அங்கே எந்தவிதமான அதிகப்படியான கூட்டமும் இல்லை. அங்கே மிகச் சாதாரணமான முறையிலேதான் இருந்தது. அதுவரையிலும் போக்குவரத்துத் தடைப்படவில்லை. 6-40 மணிக்கு நாகப்பட்டினம் செல்லும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் வண்டி அந்த வழியாகச் சென்று கொண்டிருந்தது. அதற்குப்பிறகு சில நிமிஷங்களுக்கெல்லாம்தான் இந்தக் கார் போயிருக்கிறது. அந்த நேரத்திலே அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அவர் தன்னை முஸ்லீம் தோழர், சட்டமன்ற உறுப்பினர் என்று சொன்னதற்குப் பிறகும் தரக்குறைவாகப் பேசப்பட்டிருக்கிறது. அங்கே உள்ள முஸ்லீம் தோழர்கள், முன்னேற்றக் கழகத்தினர், இன்னும் பொதுமக்கள் ஆகியோர் சேர்ந்து கொண்டு எப்படி நீங்கள் அவரை இப்படிப் பேசலாம் என்று கேட்டிருக்கிறார்கள். அது வேறு விதமாகக் கலவரமாக முடிந்து விடும் என்ற நிலையிலே பக்கத்திலிருந்த டி.எஸ்.பி.யின் வீட்டிற்குச் சென்று நமது சட்டமன்ற உறுப்பினர் சொல்லி புகார் கொடுத்துவிட்டு அத்துடன் திரும்பி வந்திருக்கிறார்கள்.

ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்தக் கதி என்றால், சட்டமன்ற உறுப்பினர் என்று தெரிந்தும் போலீஸ்காரர்களின் எதிரில் இந்த நிலையிலே நடைபெற்றிருக்கிறது என்றால், மேலும் இப்படி நடைபெற்றுக்கொண்டிருந்தால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எப்படிப் பாதுகாப்பு இருக்கும்? சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் தாக்கப்பட்டு கவலைக்கிடமான நிலையிலே இருந்தார்கள். இந்த நிலையிலே பார்க்கும் பொழுது மிகத் தீவிரமாக ஆளுங்கட்சியிலே இருப்பவர்களை தமிழக அரசிலே மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து நல்லமுறையில் இவைகளை நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த முறையிலே விரிவாக விவரங்களைப் பேச வேண்டுமென்றால் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று பேரவைத் தலைவரவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஏன் இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்பதைப் பற்றி விளக்கினார்கள். ஆனால், இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இல்லையே என்பது உண்மையிலே ஒருகுறை என்றுதான் கருதுகிறேன். நேற்றையதினம், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களை நேரில்

1979 மார்ச் 14] [திரு. ச. இராமச்சந்திரன்]

கேட்டறிந்து அதற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்ற வகையில் நேற்றையதினம் எடுத்துக் கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களையும் நேரிலே கேட்டேன் அவரிடத்திலும் சொன்னேன், இன்றைய தினம் இதை எடுத்துக்கொள்ளலாம் என்று. அவர்களும் நேரில், என்ன நடந்தது என்பதைப் பற்றி என்னிடத்திலே தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

நான் குறிப்பிட விரும்புவது, 10—3—1979 அன்று மாலை சுமார் 7.25 மணிக்கு லத்தீப் அவர்கள் காரிலே சிதம்பரத்திற்குப் போயிருக்கிறார்கள். அப்படி போகிறபொழுது வடக்கு வீதியும் மேற்கு வீதியும் சேர்ந்திருக்கிற சந்திப்பினை அந்த கார் சென்று அடைந்திருக்கிறது. அந்தக்கார் தவறான வழியில்—அதாவது சரியான வழியல்ல, தவறான ரூட்டில்— அது திரும்பியிருக்கிறது. அப்படித் திரும்பி இருக்கும்போது அங்கே டிராஃபிக்கிலே இருந்த கான்ஸ்டபிள் செல்வராஜ், பி.சி.1850 என்பவர், அந்த வண்டியை நிறுத்தி காரிலே உள்ள டிரைவரை ஏசி இருக்கிறார். அந்தக் காரிலே இருந்த சட்டமன்ற உறுப்பினர் காரை விட்டு கீழே இறங்கி—லத்தீப் அவர்கள் சொன்னது தன்னை சட்டமன்ற உறுப்பினர் என்று அறிவித்தும்கூட, மீண்டும் அந்த கான்ஸ்டபிள் தரக்குறைவாக ஏசினார் என்பது. ஆனால், கான்ஸ்டபிளைப் பொறுத்தவரையிலே, அவர் கொடுத்திருக்கின்ற விளக்கம், நான் டிரைவரைத் தான் ஏசினேன், சட்டமன்ற உறுப்பினரை ஏசவில்லை என்கிறார்கள். ஆக, என்ன நடந்தது இருவருக்குள் என்பது நாம் விசாரித்து தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

ஆனால், நல்ல வேளையாக மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள்— அருகிலேயே டி.எஸ்.பி. வீடு இருந்திருக்கிறது—டி.எஸ்.பி. இடத்திலே நேரிலே போய் அந்த விவரங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார். டி.எஸ்.பி., அவரை சமாதானப்படுத்தியிருக்கிறார், வருத்தமும் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள், பண்புள்ள டி.எஸ்.பி., பண்பில்லா காவலர் என்று அவரிடத்திலே சொல்லிவிட்டு வந்தார்.

நேற்றையதினம் நான் பேசும்பொழுது 'என்னிடத்திலே டி.எஸ்.பி. நல்லமுறையிலே நடந்து கொண்டார்' என்று என்னிடத்திலே தெரிவித்தார். நானும் நேற்று மாலை, டி.எஸ்.பி யோடு தொடர்பு கொண்டேன், என்ன நடந்தது என்று கேட்டேன். அவரும், அந்த கான்ஸ்டபிள் எப்படி நடந்து கொண்டார் என்று அங்கே இருக்கிற பொது மக்களிடத்திலே விசாரித்து அறிவதாகவும் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் எழுத்து மூலமாகப் புகார் கொடுத்திருக்கிறாரா என்றால், ஒன்றும் தரவில்லை. இருந்தாலும் அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். என்று

குறிப்பிட்டார்கள். நான், மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ அவர்களுக்குத் தெரிவிப்பது, ஆளுங்கட்சிக்கு ஒரு நியதி, எதிர்கட்சிக்கு ஒரு நியதியா என்று கேட்டார்கள். நிச்சயமாக அந்த நிலை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இது சம்பந்தமாக என்ன நடந்தது என்பதைப் பற்றி ஆராய்ந்து ஒரு நல்ல தீர்வு காண அரசு முற்படும் என்பதைத் தெரிவித்து, இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டதற்கு நான் உண்மையிலே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்து, அதோடு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லையென்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

[முற்பகல் 10.30]

(ஆ) கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது மறியல் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பற்றிய ராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் சிபாரிசை வெளியிட்டு அமுல் நடத்தவும் மற்றும் பல கோரிக்கைகளுக்காகவும் மாநிலம் முழுவதும் உள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் 12.3.79 முதல் மத்திய மாநில அரசு அலுவலகங்கள் முன்பு தொடர்ந்து மறியல் செய்து வருவதால் ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலையைக் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு

1. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், 2. திரு. ஆர். கிருஷ்ணன், 3. திரு. என். வரதராசன், 4. திரு. தே. ஞானசிகாமணி, 5. திரு. சி. கோவிந்தராசன், 6. திரு. சோ. அழகர்சாமி, 7. திரு. மு. அம்பிகாபதி, 8. திரு. சேலம் மு. ஆறுமுகம், 9. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, 10. திரு. ஏ. ஆர். மாரிமுத்து, 11. திரு. செ. சதாசிவம், 12. திரு. சொ. ந. பழனிசாமி, 13. திரு. ஓ. சுப்பிரமணியன், 14. திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் தீர்மானம் கேட்டிருக்கிறார்கள், இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்குமாறு திரு. பி. சொரணம் அவர்களை அழைக்கிறேன்.........